மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் துவங்கப்பட்ட வட்டங்களுக்கு உடனடியாகக் கட்டடங்களைக் கொடுப்பதற்கான நிதி ஒதுக்கீடு உடனடியாகச் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பழமையான கட்டடங்களெல்லாம் மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலே இருக்கின்றனவா என்று மாவட்ட நிருவாகத்தின் சார்பில் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. அந்த வகையிலே, மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலே அந்தக் கட்டடங்கள் இல்லையென்று சொன்னால், அதனை உடனடியாகப் புதுப்பித்து, புதிய கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் பெறப்படும். எனவே, பழமையான கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையைப் பரிசீலித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

10—

ஆவின் பாலகத்திற்கு கட்டடம்

***48854—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி-வேலூர் தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், கோக்கலை ஊராட்சி, மேட்டுப்பாளையத்தில் உள்ள ஆவின் பாலகத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2021 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட முத்தான முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகின்றேன். அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரம் உயர அயராது பாடுபட்டு, மக்களின் வாழ்க்கையில் ஒளிவிளக்கேற்றிய ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் செல்லப் பிள்ளை, 7.5 சதவிகித உள் இட ஒதுக்கீட்டின்மூலம் ஏழை அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவை நிறைவேற்றிய தமிழகத்தின் முதல்வர், பாசமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியை எடப்பாடியார் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடத்திட ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் பணிவோடு வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், கோக்கலை ஊராட்சிக்குட்பட்ட மேட்டுப்பாளையம் கிராமத்தில் ஆவின் பாலகம் எதுவும் செயல்படவில்லை. அங்கு துணை கொள்முதல் நிலையம், sub–centre *மட்டும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. ஆகவே, மேட்டுப்பாளையம் கிராமத்தில் ஆவின் பாலகமே இல்லாத நிலையில் கட்டடம் கட்டும் அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, இருக்கையில் இல்லை. வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*